முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

**முன்னிலை: திருமதி *K*.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் செவ்வாய் கிழமை**

**H.M.C.M.A.No.14/2024**

(CNR No.TNSV01002090–2024)

*******

Dr.P.சுடர்மதி ... மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரர்

-எதிர்-

Dr.N.முனீஸ் ..எதிர்மேல்முறையீட்டாளர்/மனுதாரர்

இம்மேல்முறையீடு சிவகங்கை சார்பு நீதிமன்றம் H.M.OP.No.01/2022ல் 12.01.2024-ம் தேதி பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Dr.N.முனீஸ் . . . மனுதாரர்

-எதிர்-

Dr.P.சுடர்மதி . . . எதிர்மனுதாரர்

இம்மேல்முறையீடு என்முன்பு 25.02.2026 அன்று இறுதிவிசாரணைக்காக வந்தபோது மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு.N.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு.*K*சீமராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும் மற்றும் இருதரப்பு எழுத்து மூலமான வாதுரையை பரிசீலனை செய்தும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட இருதரப்பு சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:18:30 +0530

10.03.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

**தீர்ப்புரை**

சிவகங்கை சார்பு நீதிமன்றம் H.M.O.P.No.01/2022-ல் கடந்த 12.01.2024-ம் தேதியன்று பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்து மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிடக் கோரி மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரரால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.42 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**3) விசாரணை நீதிமன்றத்தின் முடிவு:-**

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருடன், எதிர்மனுதாரரை சேர்ந்து வாழ வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. செலவு தொகை இல்லை.

**4) மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:-**

1. விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணை சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் முரணானது.

2. எதிர்மனுதாரர் தனது குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரருடன் சேர்ந்து வாழத் தயாராக இருப்பதையும், ஆனால் தற்சமயம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் தங்கி முதுகலைப் படிப்பினை படித்து வரும் நிலையில்

மேற்கண்ட படிப்பு முடியும் வரை சேர்ந்து குடியிருக்க சாத்தியமில்லை என்பதையும், குழந்தையின் நலன் கருதி மனுதாரர் செய்துள்ள மனத்துயரங்களையும், கொடுமைகளையும் மறந்து மேற்கண்ட படிப்பிற்கு பின்னர் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பின் இடத்தை பொறுத்து அவ்விடத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ சம்மதித்திருப்பதையும் விசாரணை நீதிமன்றம் சரியாக அணுகவில்லை. எதிர்மனுதாரரின் மேற்கண்ட முழுசாட்சியத்தையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்காமல் உத்தரவில் எவ்வித விளக்கமுமின்றி உபயதரப்பினரும் சேர்ந்து வாழத் தயாராக இருப்பதாகவும் அதனால் மனுவை அனுமதிப்பதாகவும் கூறியிருப்பது தவறானதாகும்.

3. எதிர்மனுதாரர் முதுகலைப் படிப்பிற்காக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரில் சேருவதற்கு முன்னர் உபயதரப்பினரும் அவரவர் வழக்கறிஞர் முன்னிலையில் நீதிமன்றத்தில் சமாதானம் பேசியபோது அவர்கள் இருவரும் கடைசியாக சேர்ந்து தனியாக வசித்த மானாமதுரை அன்புநகர் வாடகை வீட்டில் குடியிருக்க எதிர்மனுதாரர் விருப்பம் தெரிவித்ததற்கு மனுதாரர் மறுத்த காரணத்தினால் தான் அது நிறைவேறவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலித்திருக்க வேண்டும். மேற்கண்ட சமாதானப்பேச்சு தோல்வியடைவதற்கு மனுதாரரே முழுக்காரணம் என்பதையும், அவ்வகையில் மனுதாரர் பெயரளவிலேயே சேர்ந்து வாழ மனுச் செய்துள்ளாரே தவிர உண்மையில் அவருக்கு சேர்ந்து வாழ்வதில் முழுமையான எண்ணம் இல்லை என்பதை விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து மனுவை தள்ளுபடி செய்திருக்க வேண்டும்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:18:48 +0530

10.03.2026

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

4. மனுதாரரே தன் தாயாரைப் பற்றி mentally unstable எனக் குறிப்பிட்டு எதிர்மனுதாரருக்கு எ.ம.சா.ஆ.4 குறுஞ்செய்தி அனுப்பியிருக்கும் நிலையிலும், எ.ம.சா.ஆ.1 உறுதி மொழிக் கடிதத்தை மனுதாரர் எழுதிக் கொடுத்து அதனடிப்படையில் ஏற்கனவே மனுதாரர் பெற்றோருடன் சேர்ந்து வாழ்ந்து வந்த ஆனந்தபுரம் பைபாஸில் உள்ள சொந்த வீட்டை விட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் மட்டும் தனித்து அன்பு நகரில் உள்ள வாடகை வீட்டில் சேர்ந்து வாழ்ந்தபோதுதான் எதிர்மனுதாரர் கருவுற்றுள்ளார் என்பதையும், மேற்கண்ட சந்தர்ப்பத்தில் மனுதாரர் மீண்டும் பெற்றோர் வசிக்கும் வீட்டிற்கே சென்று மனுதாரர் சேர்ந்து வாழக் கோருவது பிரச்சனையை தீர்க்க உதவாது என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. மேலும் எ.ம.சா.ஆ.4 குறுஞ்செய்திகளை முழுமையாக பரிசீலித்திருக்கும் பட்சம் விசாரணை நீதிமன்றம் மனுவை அனுமதிக்க சாத்தியமில்லை.

எனவே, விசாரணை நீதிமன்றத்தால் ஹெச்.எம்.ஓ.பி.01/2022-ல் 12.01.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணையை இரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரி மேல்முறையீட்டாளர்/மனைவியால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>5. இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

1. சிவகங்கை சார்பு நீதிமன்றத்தால் ஹெச்.எம்.ஓ.பி.01/2022-ல் 12.01.2024-ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணை இரத்து செய்யத்தக்கதா?

2. இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.03.10 18:18:55 +0530

**தீர்வுக்குரிய பிரச்சனை:-**
**பிரச்சனைகள்: 1 மற்றும் 2**

**6)** இம்மேல்முறையீடானது சிவகங்கை, சார்பு நீதிமன்றம் ஹெச்.எம்.ஓ.பி.01/2022-ல் மனுதாரருடன், எதிர்மனுதாரரை சேர்ந்து வாழச் சொல்லி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7)** மேற்படி அசல் மனுவானது மனுதாரருடன் எதிர்மனுதாரரை சேர்ந்து வாழக் கோரி இந்து திருமணச்சட்டம் பிரிவு 1955, பிரிவு 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரும், எதிர்மனுதாரரும் சட்டப்படியான கணவன், மனைவி என்பதும், இருவரின் திருமணத்தின் பயனாக ஒரு ஆண் குழந்தையும் பிறந்துள்ளார் என்பதும் உபயத்தரப்பினர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் தனது குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரருடன் சேர்ந்து வாழத் தயாராக இருப்பதையும், ஆனால் தற்சமயம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் தங்கி முதுகலைப் படிப்பினை படித்து வரும் நிலையில் மேற்கண்ட படிப்பு முடியும் வரை சேர்ந்து குடியிருக்க சாத்தியமில்லை என்பதையும், குழந்தையின் நலன் கருதி மனுதாரர் செய்துள்ள மனத்துயரங்களையும், கொடுமைகளையும் மறந்து மேற்கண்ட படிப்பிற்கு பின்னர் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பின் இடத்தை பொறுத்து அவ்விடத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ சம்மதித்திருப்பதையும், மேலும் எதிர்மனுதாரர் முதுகலைப் படிப்பிற்காக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரில் சேருவதற்கு முன்னர் உபயதரப்பினரும் அவரவர் வழக்கறிஞர் முன்னிலையில் நீதிமன்றத்தில் சமாதானம்

பேசியபோது அவர்கள் இருவரும் கடைசியாக சேர்ந்து தனியாக வசித்த வந்த மானாமதுரை அன்புநகர் வாடகை வீட்டில் குடியிருக்க எதிர்மனுதாரர் விருப்பம் தெரிவித்ததற்கு மனுதாரர் மறுத்த காரணத்தினால் தான் அது நிறைவேறவில்லை என்பதையும் அறிய முடிகிறது. மேலும் மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பதில் எதிர் உரையில் "***மனுதாரர், எதிர்மனுதாரருடன் தனிக்குடித்தனமாக வாழ்வதற்கு தயாராகவே இருக்கிறார். மனுதாரருக்கு இன்றைய தேதி வரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முழுமையான எண்ணம் உள்ளது. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு மனதளவில் யாதொரு கொடுமையும் செய்யவில்லை.***" என்று கூறியிருப்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**8)** மேலும் *2026 – Hon'ble Jharkand High Court 2356 – Division Bench Jitendra Azad vs Meena Gupta* என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" *When a wife has withdrawn from the society of the other aggrieved party for her study or job is a reasonable excuse under Section 9 Restitution of Conjugal Rights of Hindu Marriage Act.*

*9)* மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை *C.M.A. (MD)Nos.379 & 380/2019 – A.Ramesh vs N.Rama Swathika* என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

"*Matrimonial litigation often reflects not only the relationship between husband and wife but also the interplay of attitudes and expectations among their respective*

*families. A short-lived cohabitation, early pregnancy, geographical separation on account of employment and the imprint of parental influence appear to have shaped the present dispute more than any entrenched incompatibility between the spouses themselves.*

*The law of divorce under the Hindu Marriage Act, 1955, while recognizing mental cruelty as a ground, demands convincing material that living together has become harmful or injurious for one spouse. Mere friction, misunderstandings or isolated incidents in the early months of marriage, particularly when many of them remain unproved or are mutually attributable, do not suffice to dissolve the marital bond. Where, as in the present case, one spouse continues to assert a genuine willingness to resume marital life and the other fails to establish legal grounds for dissolution, the Court is, by statute as as well as by principle, called upon to uphold the sanctity of marriage rather than to endorse its severance.*

*It is earnestly hoped that, keeping in view the welfare of their minor child and the spirit underlying the decree for restitution of conjugal rights, the parties will reflect calmly, set aside their mutual bitterness and make a sincere endeavor to rebuild their relationship within the framework of mutual respect and understanding".*

**10)** மேலும் இவ்வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளரான கணவருக்கு தன்னுடைய வயதான பெற்றோர்களை பராமரிக்கக்கூடிய கடமையும், பொறுப்பும் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் அவருக்கு தன்னுடைய மனைவி

மற்றும் இளவர் குழந்தையையும் பராமரிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் உள்ளது என்பதையும் இந்நீதிமன்றம் கவனிக்கத் தவறவில்லை. ஆகவே எதிர்மேல்முறையீட்டாளரான கணவர் தன்னுடைய மனைவியான மேல்முறையீட்டாளர் தனது மேல்படிப்பை முடித்து விட்டு வந்தபின் எதிர்மேல்முறையீட்டாளரான தனது கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவித்துள்ளதையும் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்வதே வழக்கு பொருண்மைகளின் பேரிலும், நீதியின்பாலும் சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

***முடிவாக***, இந்து திருமணச் சட்ட பல்வகை மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, சிவகங்கை சார்பு நீதிமன்றம் H.M.O.P.01/2022-ல் கடந்த 12.01.2024 அன்று பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:19:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை.</u>**

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:19:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

10.03.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை